கொடைக்கானல், தோட்டக்கலை துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு.கோ.சீனிவாசன் எம்.எஸ்சி.,(தோ)

எண். அ2/ 2927/2021 நாள்: .10.2021

பொருள்: பணிவரன்முறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திரு.மு.முத்துகுமார், இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. வேளாண்மை ஆணையர், சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண்.அநிபி6/19583/2008 நாள்: 19.04.2008.
2. வேளாண்மை இணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/5140/2008, நாள்: 09.05.2008
3. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி5/139007/2019, நாள்: 30.07.2020
4. இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அபபி2/21864/2019 நாள்: 12.08.2020.
5. இவ்வலுவலக கடித எண்.அ2/2220/2020 நாள்: 02.09.2020.

******

**ஆணை:**

பார்வை(1)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளராக பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, பார்வை (2)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி 16.05.2008 முற்பகல் அலுவலக உதவியாளராக பணியில் சேர்ந்து கொண்டதை தொடர்ந்து, பார்வை (3)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி தமிழ்நாடு அமைச்சுப்பணி 01.10.2019 அன்றைய நிலையில் இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) பதவிக்கு தகுதி பெற்ற கீழ்நிலை பணியாளர்களில் முதுநிலையின் அடிப்படையில் பதவி உயர்வுக்கான முறையான தேர்ந்த பட்டியல் அங்கீகரிக்கப்பட்டு, சகோதர துறையான சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (4)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி, தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம், கொடைக்கானலில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு நியமன ஆணை வரப்பெற்றதை தொடர்ந்து 02.09.2020 முற்பகல் தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து கொண்டார். தனியரின் பணியினை தனியர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இப்பணிவரன்முறை உயர்நீதிமன்றம் சென்னை / மதுரை கிளைகளில் இந்நியமனம் தொடர்பாக நிலுவையில் உள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டது என்றும் உத்தரவிடப்படுகிறது.

(கு.பி.பா)

**'This regularization is subject to the outcome of the W.Ps pending on the files of the Hon'ble High court of Madras/Madurai Bench of the Hon'ble High court of Madras" relating to the recruitment to the Post included in Combined Civil Services Examination – IV for the year 2015-16, 2016-17 and 2017-18 recruitment"**

| வ.எண் | பெயர்/பதவி | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | திரு.மு.முத்துகுமார், இளநிலை உதவியாளர்(பி.அ) | தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம், கொடைக்கானல் | 02.09.2020 முற்பகல் | 02.09.2020 முற்பகல் |

மேற்காணும் பணியாளர் இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) பதவியில், இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்று ஆண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும். தகுதிகாண் பருவகாலத்திற்குள், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை முடிக்க வேண்டுமெனவும், தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னரே, இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) பதவியில் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிடப்படும். அதனைத் தொடர்ந்தே, இப்பதவியில் இரண்டாவது மற்றும் தொடர்காலமுறை ஊதியஉயர்வுகள் பெறத் தகுதியுடையவராவார் என்றும் ஆணையிடப்படுகிறது.

தோட்டக்கலை துணை இயக்குநர்,
கொடைக்கானல்

பெறுநர்

திரு.மு.முத்துகுமார், இளநிலை உதவியாளர்( பி.அ) இவ்வலுவலகம்

நகல் : வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது

நகல் : இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல் : வேளாண்மை இணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல் : "அ1-பட்டியல் பிரிவுக்கு"

நகல் : தனியரின் பணிப்பதிவேட்டிற்கு.

நகல் : இருப்பு கோப்பிற்கு.

உபரி